# FACEBOOK, INSTAGRAM , EMAIL, TIKTOK
# என்பவற்றில் எமது பாதுகாப்பை உறுதி செய்தல்

## 01 வலிமையான கடவுச்சொல்

உங்கள் ஒன்லைன் மற்றும் சமூக ஊடக கணக்குகளின் (MAIL/ FACEBOOK) பாதுகாப்பைப் பற்றி மீண்டும் சிந்தியுங்கள். எளிதாக ஊகிக்கக்கூடிய கடவுச்சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிருங்கள். எளிய கடவுச்சொல்லை விட எழுத்துக்கள், எண்கள் மற்றும் குறியீடுகள் உள்ளடங்கிய கடவுச்சொல் மிகவும் பாதுகாப்பானது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



## 02 ஒரே கடவுச்சொல்லை பயன்படுத்தாதீர்கள்

உங்கள் ஒன்லைன் கணக்குகளை பலமுறை பயன்படுத்தும்போது ஒரே கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.



## 03 இரு காரணி அங்கீகாரம்

உங்கள் ஒன்லைன் மற்றும் சமூக ஊடக கணக்குகளை அணுகும்போது இரண்டு காரணி அங்கீகாரத்தை (Two factor authentication) செயற்படுத்துங்கள். உங்கள் கடவுச்சொல் களவாடப்பட்டாலோ அல்லது வேறொருவரின் கைகளுக்குச் சென்றாலோ உங்கள் கணக்குகளின் பாதுகாப்பை உறுதி செய்ய இது உதவும்.



## 04 சாதனங்களில் கடவுச்சொல்லை சேமிக்காதீர்கள்

நீங்கள் பயன்படுத்தும் சாதனம் அல்லது BROWSER ல் கடவுச்சொல்லை ஒருபோதும் சேமிக்க (SAVE) வேண்டாம்.



## 05 பொதுக்கணினிகளைத் தவிருங்கள்

முடிந்தவரை பொதுக்கணினிகளிலிருந்து உங்கள் இணையம் மற்றும் சமூக ஊடகக் கணக்குகளை அணுகுவதைத் தவிருங்கள். நீங்கள் அவ்வாறு செய்தாலும், கணினியை பயன்படுத்தி முடித்தவுடன் உடனடியாக உங்கள் கணக்குகளிலிருந்து வெளியேறுங்கள்.



## 06 அடிக்கடி கடவுச்சொல்லை மாற்றுங்கள்

ஒவ்வொரு 1-2 வாரங்களுக்கும் ஒருமுறை கடவுச்சொற்களை மாற்றுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

